சுருக்கம்

தமிழ் வளர்ச்சி – 2021-2022-ஆம் ஆண்டு வரை 1330 குறட்பாக்களை முற்றோதல் செய்து நிலுவையில் உள்ள 219 மாணவ, மாணவியர்களுக்கு குறள் பரிசு ரூ.10,000/- வழங்குதல் - 2022 – 2023-ஆம் ஆண்டு முதல் ஆண்டுக்கு 70 மாணவர்கள் என்ற உச்சவரம்பினை நீக்குதல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி(த.வ 1.2)த் துறை

அரசாணை (நிலை) எண்.152 நாள் 17.11.2021

பிலவ, கார்த்திகை -1

திருவள்ளுவராண்டு 2052

படிக்க:

1. 2021-2022-ஆம் ஆண்டுக்கான தமிழ் வளர்ச்சித் துறையின் மானியக் கோரிக்கை அறிவிப்பு.
2. தமிழ் வளர்ச்சி இயக்குநர் (மு.கூ.பொ) அவர்களின் கடித எண்.7282/தமிழ்-4/2021, நாள்.03.09.2021 மற்றும் 08.09.2021.

******

ஆணை:

2021-2022-ஆம் ஆண்டுக்கான தமிழ் வளர்ச்சித் துறையின் மானியக் கோரிக்கை 46-இன் போது மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களால் கீழ்க்கண்ட அறிவிப்பு அறிவிக்கப்பட்டது :-

**"திருக்குறள் முற்றோதல் செய்து குறள் பரிசுக்குத் தெரிவு செய்யப்பட்டு, பரிசுத் தொகை வழங்கப்படாமல் நிலுவையிலுள்ள 219 மாணவர்களுக்கு இந்த ஆண்டு பரிசுத்தொகை வழங்கப்படும். அடுத்த ஆண்டு முதல் ஆண்டுக்கு 70 மாணவர்கள் என்ற உச்சவரம்பு நீக்கப்பட்டு, பரிசுத் தொகை உயர்த்தப்படும்".**

2) மேற்படி அறிவிப்பு தொடர்பாக தமிழ் வளர்ச்சி இயக்குநர் (மு.கூ.பொ) அவர்கள் மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், திருக்குறளின் 1330 குறட்பாக்களையும் முற்றோதல் செய்யும் மாணவ/ மாணவியர்களுக்கு அவர்களின் திறமையைப் பாராட்டி "குறள் பரிசு" என்ற பெயரில் ஆண்டுதோறும் தெரிவு செய்யப்படும் 70 பேருக்கு ஒவ்வொருவருக்கும் ரூ.10,000/-

(ரூபாய் பத்தாயிரம் மட்டும்) வீதம் பரிசு வழங்கப்பட்டு வருகிறது என்றும், தற்போது வெளியிடப்பட்ட அறிவிப்பிற்கிணங்க 2019-2020 ஆம் ஆண்டு காத்திருப்போர் பட்டியலில் உள்ள 26 மாணவர்கள் மற்றும் 2020-2021 மற்றும் 2021-2022-ஆம் ஆண்டில் 1330 குறட்பாக்களையும் முற்றோதல் செய்து அந்தந்த மாவட்டத் தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர்கள் / உதவி இயக்குநர்களால் பரிந்துரைக்கப்பட்டுள்ள 193 பேர் என மொத்தம் உள்ள 219 மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ.10,000/- வீதம் மொத்தம் ரூ.21,90,000/- ஒப்பளிப்பு செய்யப்பெறலாம் எனத் தெரிவித்துள்ளார்.

3) குறள் பரிசு திட்டத்திற்கென 2021 – 2022-ஆம் நிதியாண்டுக்கான வரவு செலவு மதிப்பீட்டில் ரூ.7,00,000/- நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது என்றும் எனவே, கூடுதல் தொகை ரூ.14,90,000/-ஐ 2021-2022-ஆம் நிதியாண்டுக்கான திருத்திய மதிப்பீடு / இறுதித் திருத்த நிதியொதுக்கத்தில் பெறத்தக்க வகையில் ஆணை வெளியிடப் பெறலாம் என்றும், குறள் பரிசுத் தொகையைப் பட்டியிட்டு இணைப்பில் குறிப்பிட்டுள்ள மாணவ மாணவியர்களுக்கு வழங்கத் தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அனுமதி அளித்தும் ஆணையிடப் பெறலாம் என்றும் தமிழ் வளர்ச்சி இயக்குநர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

4) மேலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் பரிசுத்தொகை மற்றும் பாராட்டுச் சான்றிதழ் தலைமைச் செயலகத்தில் வழங்கப்பெறும் நேர்வில் அதைப் பெற சென்னை வரும் மாணவர்களுக்கு போக்குவரத்துக் கட்டணம், சிற்றுண்டி, உணவு, பாராட்டுச் சான்றிதழ் தயாரித்தல் மற்றும் பிற சில்லரைச் செலவினத்திற்கு ஒரு மாணவனுக்கு ரூ.2,000/- வீதம் 219 மாணவர்களுக்கு ரூ.4,38,000/- செலவினமாக அமையும் என்றும், 2021-2022-ஆம் நிதியாண்டுக்கான வரவு செலவு மதிப்பீட்டில் ரூ.1,50,000/- நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும், கூடுதலாகத் தேவைப்படும் தொகை ரூ.2,88,000/-ஐ 2021-2022-ஆம் நிதியாண்டின் திருத்திய மதிப்பீடு / இறுதித் திருத்த நிதியொதுக்கத்தில் பெறத்தக்க வகையில் ஆணை வெளியிடப் பெறலாம் என்றும் தமிழ் வளர்ச்சி இயக்குநர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

5) மேலும், இம்மானியக் கோரிக்கை அறிவிப்பில் அடுத்த ஆண்டு முதல் ஆண்டுக்கு 70 மாணவர்கள் என்ற உச்சவரம்பு நீக்கப்பட்டு, பரிசுத்தொகை உயர்த்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளதால் அந்தந்த நிதியாண்டில் மாவட்டத் தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர்கள் / உதவி இயக்குநர்களால் பரிந்துரைக்கப்படும் மாணவர்கள் அனைவருக்கும் குறள் பரிசுத் தொகை வழங்கப்பெறலாம் என்றும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 31.08.2021 அன்று சட்டமன்றப் பேரவையில் தமிழ் வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கை உரையின்போது குறள்பரிசுத் தொகை ரூ.10,000/-லிருந்து ரூ.25,000/- (ரூபாய் இருபத்தைந்தாயிரம் மட்டும்) ஆக உயர்த்தி அடுத்தாண்டு முதல் வழங்கப்பெறும் எனத் தெரிவித்தார்கள். அதனடிப்படையில்

2022-2023 -ஆம் நிதியாண்டு முதல் குறள் பரிசுத் திட்டத்தின் கீழ் குறள் ஒப்புவிக்கும் மாணவ/ மாணவியருக்கான பரிசுத் தொகையினை ரூ.10,000/-லிருந்து ரூ.25,000/- (ரூபாய் இருபத்தைந்தாயிரம் மட்டும்) ஆக உயர்த்தி வழங்க ஆவன செய்யுமாறும் அவ்வகையில், 2022-2023 ஆம் நிதியாண்டு முதல் திருக்குறள் முற்றோதல் பாராட்டுப் பரிசு பெறும் மாணவர்களின் உச்சவரம்பினை நீக்கும் நேர்வில் வரவு செலவு மதிப்பீட்டில் தொகை பெறுவதில் ஏற்படும் சிக்கல்களைத் தவிர்த்திடும் வகையில், இத்திட்டத்திற்கென ஒவ்வோர் ஆண்டும் வரவு செலவு மதிப்பீட்டில் தோராயமாக 200 மாணவர்களுக்குப் பரிசுத்தொகையாக ரூ.25,000/- வீதம் மொத்தம் ரூ.50,00,000/- ஒப்பளிப்பு செய்யப்பெறலாம் என்றும், மேலே தெரிவித்துள்ள காரணங்களின் அடிப்படையில் பிற சில்லரைச் செலவினத்திற்கு ஒருவருக்கு தோராயமாக ரூ.2,000/- வீதம் 200 பேருக்கு மொத்தம் ரூ.4,00,000/- (ரூபாய் நான்கு இலட்சம் மட்டும்) ஒப்பளிப்பு செய்யப்பெறலாம் என்றும் தமிழ் வளர்ச்சி இயக்குநர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

6) அரசின் கவனமான பரிசீலனைக்குப்பின் 2021-2022-ஆம் ஆண்டுக்கான தமிழ் வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கை அறிவிப்பில் இடம்பெற்ற அறிவிப்பினை செயற்படுத்த ஏதுவாக, தமிழ் வளர்ச்சி இயக்குநர் அவர்களின் கருத்துருவினை ஏற்று, கீழ்க்கண்டவாறு அரசு ஆணையிடுகிறது:-

(i) 2021-2022-ஆம் ஆண்டு வரை 1330 குறட்பாக்களையும் முற்றோதல் செய்து நிலுவையில் உள்ள 219 மாணவர்கள் இணைப்பில் தெரிவித்துள்ள ஒவ்வொருவருக்கும் ரூ.10,000/- (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) வீதம் குறள் பரிசு வழங்க ஆணையிடப்படுகிறது. அவ்வகையில் மொத்த செலவினத் தொகையான ரூ.21,90,000/-ம் (ரூபாய் இருபத்தோரு இலட்சத்து தொண்ணூறாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு வழங்கியும், பாராட்டுச் சான்றிதழ், போக்குவரத்துக் கட்டணம், சிற்றுண்டி, உணவு மற்றும் பிற சில்லரை செலவினங்களுக்கென ஒரு மாணவனுக்கு ரூ.1,500/- வீதம் 219 மாணவர்களுக்கு தேவைப்படும் தொகை ரூ.3,28,500/-யும் (ரூபாய் மூன்று இலட்சத்து இருபத்து எட்டு ஆயிரத்து ஐநூறு மட்டும்) என மொத்தம் ரூ.25,18,500/- (ரூபாய் இருபத்தைந்து இலட்சத்து பதினெட்டாயிரத்து ஐநூறு மட்டும்) நிதி ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

(ii) மேலே பத்தி (i)-ல் பிற செலவினங்களுக்காக ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை சென்னையைத் தவிர்த்து, அந்தந்த மாவட்டங்களில் நடைபெறும் நேர்வில் சில்லரைச் செலவினத்திற்கு ரூ.500/- (ரூபாய் ஐநூறு மட்டும்) வீதமும், தலைமைச் செயலகத்தில் வழங்கபெறும் நேர்வில் ரூ.1500/- (ரூபாய் ஆயிரத்து ஐநூறு மட்டும்) வீதமும் வழங்கவும், நேர்வுக்கேற்ப மீதமாகும் சில்லரை செலவின தொகையினை அரசு கணக்கில் செலுத்தவும் இயக்குநர் தமிழ் வளர்ச்சி துறை அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

(iii) 2022-2023-ஆம் நிதியாண்டு முதல் குறள் பரிசு பெறும் மாணவர்களின் எண்ணிக்கை 70 என்ற உச்சவரம்பு நீக்கப்பட்டு, 1330 குறட்பாக்களையும் முழுமையாக ஒப்புவிக்கும் மாணவர்கள் அனைவருக்கும் "குறள் பரிசு" வழங்கப்படும்;

7. மேலே பத்தி 6(i)-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:

(i) <u>குறள் பரிசு வழங்குவதற்கான செலவினத் தொகை ரூ.21,90,000/-</u>

"2202. பொது கல்வி – 05 மொழி வளர்ச்சி – 001. நெறிப்படுத்தலும் நிருவாகமும் - மாநிலச் செலவினங்கள் - AA. தமிழ் வளர்ச்சி இயக்ககம் - 359 பரிசுகளும் வெகுமதிகளும் - 01 பரிசுகளும் வெகுமதிகளும்"
(IFHRMS த.தொ.கு. 2202 05 001 AA 35901)

(ii) <u>சில்லறை செலவினத்திற்கான செலவினத் தொகை ரூ.3,28,500/-</u>

"2202 பொது கல்வி – 05 மொழி வளர்ச்சி - 001 நெறிப்படுத்தலும் நிருவாகமும் - மாநிலச் செலவினங்கள்- AA. தமிழ் வளர்ச்சி இயக்ககம் - 305 அலுவலகச் செலவுகள் – 02 ஏனைய சில்லரைச் செலவினங்கள்"
(IFHRMS த.தொ.கு. 2202 05 001 AA 30502)

8. மேலே பத்தி 6(i)-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தினை மேற்கொள்ளத் தேவையான கூடுதல் நிதியொதுக்கம் ரூ.16,68,500/-ஐ 2021-2022-ஆம் நிதி ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும் இருப்பினும் மேற்கண்ட செலவினம் 2021-2022-ஆம் நிதி ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் கொணர்ந்து சட்ட மன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும் இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி மேலே பத்தி 6(i)-இல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட இயக்குநர், தமிழ் வளர்ச்சித் துறை, சென்னை அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும் பத்தி 6(i)-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை 2021-2022-ஆம் நிதி ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு உரிய வரைவு விளக்கக்குறிப்பினையும் மற்றும் திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு உரிய கருத்துருவையும் தவறாது நிதித் (தவ / வ.செ.பொ-I) துறைக்கு அனுப்பி வைக்குமாறு இயக்குநர், தமிழ் வளர்ச்சித் துறை, சென்னை அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

9. இக்குறள்பரிசுக்கென மேலே பத்தி 6(i)-இல் ஒப்பளிப்பு செய்யப்பெற்ற தொகையினை தமிழ்நாடு நிதிவிதித்தொகுப்பு-I பிரிவுக்கூறு 99-இன்கீழ் முன்பணமாகப் பெறவும், பெற்ற முன்பணத்தை நேர்செய்யவும் தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அனுமதியளிக்கப்படுகிறது.

10. மேற்படி செலவினத்தை தமிழ்நாடு நிதி விதியியல் கோட்பாடுகளை பின்பற்றி மேற்கொள்ளவும், இச்செலவினம் தொடர்பாக பயனீட்டுச் சான்று மற்றும் செலவின விவரங்களை அரசுக்கு அனுப்புமாறும் தமிழ் வளர்ச்சி இயக்குநர் அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

11. மேலும், 2021-2022-ஆம் நிதியாண்டுக்கான மானியக் கோரிக்கை அறிவிப்பு எண்.4-இல் இடம் பெற்றுள்ளவற்றில், 1330 குறட்பாக்களையும் முற்றோதல் செய்யும் அனைத்து மாணவர்களுக்கும் 2022-2023-ஆம் நிதியாண்டு முதல் குறள் பரிசுத் தொகையினை உயர்த்தி வழங்குவது குறித்து தனியே அரசுக்கு கருத்துரு அனுப்பி அனுமதி பெறுமாறு இயக்குநர், தமிழ் வளர்ச்சித் துறை அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

12. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.8982/நிதி(தவ(ம)செ)/2021, நாள் 15.11.2021-இல் பெறப்பட்ட இசைவுடனும் மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண்.805 (எண்ணூற்று ஐந்து) உடனும் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

மகேசன் காசிராஜன்,

அரசு செயலாளர்.

பெறுநர்

இயக்குநர் (மு.கூ.பொ), தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை-8.

குறள் பரிசு பெறும் மாணவ / மாணவியர்கள்-219 நபர்கள்

(தமிழ் வளர்ச்சி இயக்குநர் மூலமாக)

மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை-9/18

சம்பளக் கணக்கு அலுவலர்(கிழக்கு), சென்னை-8

சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள்

(தமிழ் வளர்ச்சி இயக்குநர் மூலமாக)

நகல்

நிதி(தவ(ம)செ)த் துறை, சென்னை-9.

இருப்புக் கோப்பு / உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்